தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண் 69 /ந/2023
நாள் 02.08.2023

திரு. M. மோகன் சந்திரன்,
ஒசூர்,
கிருஷ்ணகிரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
கிருஷ்ணகிரி நகராட்சி,
கிருஷ்ணகிரி மாவட்டம். – எதிர் மனுதாரர்

கிருஷ்ணகிரி, ஒசூர், பாகலூர் ரோடு, அனுக்கிரஹா சீனியர் சிட்டிசன் காம்ப்ளக்ஸ் என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. மோகன் சந்திரன் என்பவரின் 21.03.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.03.2023 அன்று பெறப்பட்டு 69/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## <u>ஆணை</u>

கிருஷ்ணகிரி, ஒசூர், பாகலூர் ரோடு, அனுக்கிரஹா சீனியர் சிட்டிசன் காம்ப்ளக்ஸ் என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. மோகன் சந்திரன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"நான் கடந்த 01.08.2013 ஆம் தேதி அன்று நாமக்கல் நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்டு 3 வருட காலம்வரை பணியாற்றி வந்தேன். செப்டம்பர் 2016 ஆம் வருடத்தில் எனது சொந்த காரணத்திற்காக கிருஷ்ணகிரி நகராட்சிக்கு பணியிட மாற்றம் அடைந்தேன். மேலும் 30.06.2019 அன்று கிருஷ்ணகிரி நகராட்சியில் இளநிலை உதவியாளராக ஓய்வும் பெற்றேன்.

எனக்கு சேர வேண்டிய நிலுவைத் தொகையான CPS & SPF ஆகியவற்றை கோரி கடந்த 2019 ஆம் வருடம் மற்றும் 20.04.2021 மற்றும் 15.11.2022 ஆகிய தேதிகளில் மனு அளித்தேன். மேலும், நான் 15.11.2022–ல் கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையரை நேரில் சந்திக்க

சென்றேன். அச்சமயத்தில் மேலாளர் திரு.நாகூர் மீரான் மற்றும் திருமதி.லட்சுமி (Record Clerk) ஆகிய இருவரும் எனது பணிப்பதிவேட்டினை எனது கையில் கொடுத்து எனது செலவிலேயே நகல் எடுத்து வரும்படி பணித்தனர். நான் நான்கு காப்பிகள் நகல் எடுத்தும் கொடுத்தேன். சுமார் 4 மணி நேரம் கிருஷ்ணகிரி நகராட்சி அலுவலகத்தில் காத்திருந்து மிகவும் அவமானப்பட்டு, மேற்படி கூறிய பொருள் சம்பந்தமாக எவ்வித தகவலும் அளிக்காமல் ஆணையரையும் பார்க்க விடாமல் திருப்பி அனுப்பினர்.

எனக்கு சேரவேண்டிய ஓய்வூதிய பணப்பயன்களான CPS & SPF ஆகியவை வழங்கவேண்டி மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மற்றும் சேலம் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும் மனு அளித்தும் எவ்வித பதிலும் பெறப்படவில்லை.

எனவே, தாங்கள் தயவு கூர்ந்து உரிய பரிகாரம் அளித்திட வேண்டுமாய் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 03.04.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளர் தனது 17.07.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:–

''திரு. M. மோகன் சந்திரன், ஓய்வு பெற்ற இளநிலை உதவியாளர் என்பவருக்கு அளிக்க வேண்டிய சிறப்பு சேமநல நிதி தொகையான ரூ 16,509/– காசோலை மூலமாக (எண்.248624) 25.05.2023 அன்று அன்னாருக்கு வழங்கப்பட்டது.

அன்னாருக்கு குழு காப்பீட்டு திட்டத்தின்கீழ் வழங்க வேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய தொகை ந.க.எண்.843/2023/பி3 நாள் 04.06.2023 கடிதம் மூலம் கருவூல கணக்கு ஆணையரக பணி ஓய்வூதிய திட்டப் பிரிவுக்கு பிரேரணை அனுப்பி, ரூ.3,01,226/– அனுமதிக்கப்பட்டு கருவூலத்திற்கு 14.07.2023 ஆம் தேதி அன்று அனுப்பி வைக்கப்பட்டு தொகை வழங்க தயார் நிலையில் உள்ளது என்பதனை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையரும் 18.07.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.07.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. M. மோகன் சந்திரன் என்பவர் தனக்கு உடல் நலம் சரியில்லாத காரணத்தினால் 18.07.2023 அன்று நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராக முடியவில்லை எனவும் தனக்கு மற்றொரு வாய்ப்பினை அளிக்குமாறும் கோரியிருந்தார்.

(5) எதிர்மனுதாரரான கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளர் 18.07.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

''கிருஷ்ணகிரி நகராட்சியில் திரு எம். மோகன் சந்திரன் என்பவர் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி பின்னர் வயது முதிர்வின் காரணமாக 30.6.2019–ல் ஓய்வுபெற்ற பின்னர், அவருக்கு சேரவேண்டிய ஓய்வூதியப் பயன்களில், சிறப்பு சேமநல நிதி ரூ. 16,509/– காசோலை எண்.248624, நாள் 25.05.2023 மூலம் அன்னாருக்கு வழங்கப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தையும், மேலும் அவருக்கு வழங்கவேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய தொகை

(CPS) ரூபாய் 3,01,266/– நகராட்சியால் அனுமதிக்கப்பட்டு, 14.7.2023 அன்று கருவூலத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதையும், அத்தொகை மேற்கண்ட திரு. மோகன் சந்திரன் என்பவருக்கு விரைவில் வழங்கப்படும் என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) மனுதாரரின் வேண்டுகோளை ஏற்று, 26.07.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கு மீண்டும் 21.07.2023 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

(7) மனுதாரர் திரு. M. மோகன் சந்திரன் என்பவர் 26.07.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"கிருஷ்ணகிரி நகராட்சியில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி பின்னர் வயது முதிர்வின் காரணமாக 30.6.2019ல் ஓய்வு பெற்றேன். எனது பணி ஓய்வுக்குப் பின்னர் எனக்கு சேரவேண்டிய CPS மற்றும் SPF தொகை கிருஷ்ணகிரி நகராட்சியால் எனக்கு அளிக்கப்படவில்லை. இம்முறை மன்றத்தில் என்னால் புகார் அளிக்கப்பட்ட பின்னர் எனக்கு சேர வேண்டிய பணப் பயன்களில் சிறப்பு சேமநல நிதி ரூபாய் 16,509/– வழங்கப்பட்டுவிட்டது. ஆனால் CPS தொகையான ரூபாய் 3,01,266/– மற்றும் மருத்துவ விடுப்பிற்கான பணப் பயன்கள் எனக்கு அளிக்கப்படவில்லை.

கிருஷ்ணகிரி நகராட்சியில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஊழியரான நான், எனக்கு சேர வேண்டிய பணப் பயன்கள் குறித்து நகராட்சியில் கோரியபோது, நகராட்சி மேலாளர் மற்றும் இளநிலை உதவியாளராக (பொறுப்பு) பணியாற்றிய பதிவு எழுத்தரும் எனக்கு சரியான பதில் தராமல் என்னை அலைகழித்து வருகின்றனர். எனக்கு சேரவேண்டிய பணப்பயன்கள் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் என்னால் வழக்கு தொடரப்பட்டு ( W P No. 11844 / 2023) அவ்வழக்கின் மீதான 19.6.2023 நாளிட்ட தீர்ப்பில் எனக்கு சேர வேண்டிய ஓய்வூதியப் பலன்களை 4 வார காலத்திற்குள் வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நீதிமன்றம் அளித்த கால அவகாசம் முடிந்த நிலையில் எனக்கு சேர வேண்டிய ஓய்வூதியப் பலன்களை விரைவில் வழங்க ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(8) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையரின் அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரை சார்ந்த மனுதாரர் திரு. M. மோகன் சந்திரன் என்பவர் தனது 21.03.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில், கிருஷ்ணகிரி நகராட்சியில் இளநிலை உதவியாளர் பணியிலிருந்து வயது முதிர்வின் காரணமாக 30.06.2019 அன்று ஓய்வு பெற்றும் இந்நாள்வரை தனக்கு சேரவேண்டிய பங்களிப்பு ஓய்வூதிய தொகை (CPS) மற்றும் சிறப்பு சேமநலநிதித் தொகை (SPF) கிருஷ்ணகிரி நகராட்சியால் வழங்கப்படவில்லை என புகார் தெரிவித்துள்ளார்.

மேற்காணும் புகார் மனு குறித்து எதிர்மனுதாரரான கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளரிடம் விசாரணை மேற்கொண்டதில், 30.06.2019 அன்று இளநிலை உதவியாளர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற மனுதரார் திரு. M. மோகன் சந்திரன் என்பவருக்கு வழங்கப்பட

வேண்டிய ஓய்வூதியப் பயன்களில் சிறப்பு சேமநலநிதித் தொகையான ரூ 16,509/–, 25.05.2023 அன்று மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் பங்களிப்பு ஓய்வூதிய தொகையான ரூ.3,01,266/–க்கான கருத்துரு நகராட்சியால் 14.07.2023 அன்று கருவூலத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும் தனது அறிக்கையிலும் மற்றும் வாக்குமூலத்திலும் தெரிவித்து, மேற்காணும் CPS தொகை கருவூலத்திலிருந்து ஒப்புதல் பெறப்பட்டதும் உடனடியாக வழங்கப்படும் என ஆணையாளர் உறுதியளித்துள்ளார்.

மனுதாரர் வயது முதிர்வின் காரணமாக 30.06.2019 அன்று ஓய்வு பெற்ற நிலையில் அவருக்கு சேரவேண்டிய ஓய்வூதிய பயன்களை வழங்குவதற்கு, மனுதாரர் ஓய்வு பெற்றபின் அவரது வாழ்வாதாரத்தையும் மற்றும் மனுதாரரை சார்ந்திருக்கும் அவரது குடும்ப செலவினங்களையும் கருத்தில் கொள்ளாமல் 4 ஆண்டுகள் எடுத்து கொண்டு பொறுப்பற்ற முறையிலும் மற்றும் அலட்சியப் போக்குடனும் நடந்து கொண்டுள்ள கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் செயலினை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது.

கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு மனுதாரர் திரு. M. மோகன் சந்திரன் என்பவருக்கு சேரவேண்டிய பங்களிப்பு ஓய்வூதியத் தொகை முழுவதையும் 15 நாட்களுக்குள் ஒப்பளிப்பு செய்து, அதன் அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு உடன் அனுப்பி வைக்குமாறு கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 02–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. M. மோகன் சந்திரன்,
அனுக்கிரஹா சீனியர் சிட்டிசன் காம்ப்ளக்ஸ்,
பாகலூர் ரோடு, ஒசூர் – 635 126, கிருஷ்ணகிரி மாவட்டம்
2) ஆணையாளர், கிருஷ்ணகிரி நகராட்சி,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.
4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்,
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

(முத்திரை: தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை–600 032)

செயலாளர்

09/08/23